இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 25.04.2025

# வாஜ்பாய் காலமும் - மோடி காலமும் 2

பிரதமர் வாஜ்பாய்க்கு தினந்தோறும் கடிதம் எழுதி போயஸ் கார்டனை போஸ்ட் கார்டனாக மாற்றிக் கொண்டிருந்தார் ஜெயலலிதா!

**இவை எதுவும் மாநில நன்மைகளுக்கானவை அல்ல. ஊழல் குற்றச்சாட்டு அடிப்படையில் பணி நீக்கம் செய்யப்பட்ட ஹரிபாஸ்கர் ஐ.ஏ.எஸ்.க்கு மீண்டும் பதவி தர வேண்டும், சி.ராமச்சந்திரன் ஐ.ஏ.எஸின் தற்காலிக வேலை நீக்கத்தை ரத்து செய்ய வேண்டும், நெய்வேலி கார்ப்பரேஷன் நிர்வாக இயக்குநர் பூபதி வருமான வரித்துறையில் தாக்கல் செய்த கோரிக்கையை ஏற்க வேண்டும், மச்சேந்திரநாதனுக்கு துறைமுகத் துறையில் கேட்கும் இடத்தை தர வேண்டும் - இப்படி தினந்தோறும் பரிந்துரைக் கடிதங்களை அனுப்பி வந்தார். இவை நடக்கவில்லை என்றதும், பா.ஜ.க. கூட்டணிக் கட்சிக் கூட்டத்தை புறக்கணித்தார்.( 27.6.1998)**

மத்திய அமலாக்கத்துறை அதிகாரி ஒருவரது மாறுதல் தொடர்பாக பிரதமர் வாஜ்பாயைக் கண்டித்து ஜெயலலிதா அறிக்கை விட்டார். ஜெயலலிதாவை சமாதானப்படுத்த பா.ஜ.க. தலைமை ஒவ்வொருவராக அனுப்பி வைப்பார்களே தவிர, அவர் சொல்வதைக் கேட்பது இல்லை. இது ஜெயலலிதாவை கோபப்படுத்திக் கொண்டே இருந்தது.

தி.மு.க. ஆட்சியை பா.ஜ.க. அரசு கலைத்திருந்தால், ஜெயலலிதா இது எதையும் செய்திருக்க மாட்டார். ஆனால் கலைக்க மாட்டோம் என்பதில் அன்றைய தினம் பிரதமர் வாஜ்பாய், உள்துறை அமைச்சர் அத்வானி ஆகிய இருவரும் உறுதியாக இருந்தார்கள். தனது வன்மத்தை வேறு பக்கம் திருப்பினார் ஜெயலலிதா.

**பா.ஜ.க. ஆட்சியைக் கவிழ்க்க பா.ஜ.க. கூட்டணிக்குள் இருந்தே திட்டமிட்ட ஜெயலலிதா, அதற்காக வேலைகளைப் பார்க்கும் வேலையை சுப்பிரமணியம் சுவாமியிடம் கொடுத்தார். இதனை முன்கூட்டியே அறிந்து கொண்ட பிரதமர் வாஜ்பாய், உள்துறை அமைச்சர் அத்வானி ஆகிய இருவரும் தலைவர் கலைஞரிடம் பேசினார்கள். (1999 மார்ச்) ‘எங்கள் ஆட்சியை நீங்கள் ஆதரிக்க வேண்டும்’ என்று அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். தலைமைச் செயற்குழு கூடி முடிவெடுக்கும் என்றார் கலைஞர்.**

13.4.1999 தி.மு.க.வின் தலைமைச் செயற்குழு கூடியது. **“1991-96 வரை தமிழக நலன்களைத் தரைமட்டமாக்கி விட்டுத் - தழைத்துச் செழித்துள்ள லஞ்ச லாவண்ய ஊழல் கொள்கைக்கு இனியும் தமிழ்நாட்டில் இடம் தரக்கூடாது என்பதாலும் - தமிழ்நாட்டில் நடைபெறும் அப்பழுக்கற்ற கழக ஆட்சிக்கு எப்படியும் தீங்கு விளைவிக்க வேண்டும் என்பதுதான் ஜெயலலிதாவின் ஒரே ஒரு திட்டம் என்பதாலும் - இவை அனைத்தையும் திராவிட முன்னேற்றக் கழகம் கருதிப்பார்க்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆட்பட்டிருக்கிறது. இதர ஆபத்துகளைவிட ஜெயலலிதா ஆபத்தே நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் பேராபத்து”** என்று அதில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதைப் பார்த்ததும் அமைச்சர்கள் தம்பிதுரை, கடம்பூர் ஜனார்த்தனம் ஆகிய இருவரையும் பதவி விலகச் சொன்னார் ஜெயலலிதா. பா.ஜ.க. ஒருங்கிணைப்பு குழுவில் இருந்து விலகினார். பா.ஜ.க. ஆட்சிக்கு தந்த ஆதரவை திரும்பப் பெறுவதாக குடியரசுத் தலைவரைச் சந்தித்து கடிதம் கொடுத்தார் ஜெயலலிதா. “வாஜ்பாய் அரசு தேசத்தின் பாதுகாப்புக்கே அச்சுறுத்தல்” என்று அறிக்கை விட்டார் ஜெயலலிதா.

தனது ஆட்சி மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு தீர்மானத்தை 15.4.1999 அன்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார் பிரதமர் வாஜ்பாய். இந்த தீர்மானத்தின் மீது தி.மு.க. சார்பில் மரியாதைக்குரிய முரசொலி மாறன் பேசினார். ‘பா.ஜ.க.வுடன் நீங்கள் கூட்டணி வைக்கவில்லையா?’ என்று இப்போது கேட்கும் பழனிசாமி இதனை வாசிக்க வேண்டும்.

**“தேசிய மற்றும் மாநில நலனைக் கருத்தில் கொண்டு நாங்கள் முடிவெடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். எங்களது நீண்ட கால வரலாற்றில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் சிறுபான்மையினருக்கும் ஆதரவு அளித்து பாதுகாத்து வருகிறோம். நேற்று வரை நான் கூட இந்த அரசை எதிர்த்து வந்தேன். காவிரிச் சிக்கலைத் தீர்த்த பெருமையைத் தவிர இந்த அரசின் எந்தச் சாதனையையும் நான் பாராட்ட முடியாது. இன்று கூட பல பிரச்சினைகளில் என்னால் நேருக்கு நேர் சந்திக்க முடியவில்லை. ஆனால் அ.தி.மு.க. தனது புதிய நண்பர்களின் ஆதரவுடன் மேற்கொண்டுள்ள முயற்சி, மாநிலத்தின் நலனுக்கும் தேசத்தின் நலனுக்கும் எதிரானது. எனவே, தற்போதைய அரசு தொடர்வதை நாங்கள் ஆதரிக்கிறோம். எங்களுக்கு வேறு வழியில்லை. நாங்கள் அடல்ஜியை ஆதரிக்கிறோம். ஒரு போதும் ஊழலின் தாயை நாங்கள் ஆதரிக்க முடியாது” - என்று பேசினார் முரசொலி மாறன் அவர்கள். வாஜ்பாய் அரசு ஒரு வாக்கு வித்தியாசத்தில் கவிழ்ந்தது.**

**பா.ஜ.க. ஆட்சியை ஆதரித்து தி.மு.க. வாக்களித்தது குறித்து விளக்கம் அளித்த தலைவர் கலைஞர், “ஜெயலலிதாவின் ஊழலை விட மதவாதம் என்பது கொடுமையானது அல்ல. அதற்காக மதவாதம் இனிமையானது என்று பொருளல்ல. பாம்பை விட மோசம் என்றால் பாம்பும் மோசம் தான்” என்று மிகச் சரியாகச் சொன்னார்.**

1.5.1999 அன்று கூடிய தி.மு.க. நிர்வாகக் குழுவில், “பாரதிய ஜனதா கட்சி மீது கொள்கை ரீதியான - மாறுபாடான கருத்துகள் இருந்த போதிலும் - ஜெயலலிதாவின் சதித் திட்டத்தால் அவர் வெற்றி பெற்றுவிடக் கூடாது என்ற நிலையின் காரணமாக இந்த முடிவை எடுக்கிறோம்” என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பா.ஜ.க. தலைமையில் தேசிய ஜனநாயகக் கூட்டணி உருவானது. அத்வானி தலைமையில் அமைக்கப்பட்ட தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவில் முரசொலி மாறன், ஜஸ்வந்த்சிங், ஜார்ஜ் பெர்னாண்டஸ் ஆகியோர் இடம் பெற்றார்கள். இப்படி கூட்டணியின் கொள்கையை வடிவமைக்கும் இடத்திலேயே தி.மு.க.வுக்கான இடம் வழங்கப்பட்டது என்பது தான் வரலாறு.

**கூட்டணியை அறிவிக்கும் இடத்தில் பழனிசாமியை வாயைத் திறக்கவிடவில்லை அமித்ஷா என்பதுதான் இன்றைய தகராறு.**

- தொடரும்

# செய்யாற்றின் குறுக்கே எறையூரில் தடுப்பணைக் கட்ட அரசு ஆய்வு!

## பேரவையில் பெ.சு.தி.சரவணன் கேள்விக்கு நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் பதில்!

சென்னை, ஏப். 25 -

செய்யாற்றின் குறுக்கே எறையூரில் தடுப்பணைக் கட்ட அரசு ஆய்வு செய்து வருவதாக சட்டப் பேரவையில் கழக உறுப்பினர் பெ.சு.ஜி.சரவணன் கேள்விக்கு நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் பதில் அளிக்கையில் தெரிவித்தார். பேரவையில் இது குறித்த வினா - விடை வருமாறு;-



**அணைக்கட்டு**

**பெ.சு.தி. சரவணன்:** நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் காணும் வினாவிற்கு விடையளிப்பாரா? கலசப்பாக்கம் தொகுதி, புதுப்பாளையம் ஒன்றியம், நரசிங்க நல்லூர் அருகே புதிய அணைக் கட்டு கட்ட அரசு முன்வருமா?

**அமைச்சர் துரைமுருகன்:** திருவண்ணாமலையிலே, செங்கம் வட்டம், படி அக்ரஹாரம், பனை ஓலைப்பாடி, புதுப்பட்டு ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள ஏரிகளுக்கு ஏற்கெனவே குப்பநத்தம் அணையிலிருந்து தண்ணீர் போய்க் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், கொட்டக்குளம் அணைக்கட்டிலிருந்து ஏற்கெனவே வழங்கு கால்வாய்மூலம் எவ்வித தடையுமில்லாமல் தண்ணீர் சென்று கொண்டிருக்கிறது. ஆனால், உறுப்பினர் கேட்பது நரசிங்கநல்லூர் அருகே ஆற்றின் தரைத்தளமானது அணைக்கட்டு அமைப்பதற்கு உகந்ததாகஅங்கே நரசிங்கநல்லூரில் ஒரு அணை கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார். ஆனால், dam கட்டுவதற்குரிய இடமாக நரசிங்கநல்லூர் இல்லை என்பதால் சாத்தியக்கூறு இல்லை.

**பெ.சு.தி. சரவணன்:** அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் புதுப்பாளையம் பகுதியில் துறையின் பரிசீலனையில் உள்ள செய்யாற்றின் குறுக்கே ஓரந்தவாடி, காஞ்சி, தாமரைப்பாக்கம் மற்றும் கோரையாற்றின் குறுக்கே வீராநந்தல் பகுதியில் தடுப்பணை கட்டி, மழைநீரைச் சேகரித்து எங்கள் பகுதியின் விவசாயம் செழிக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் துரைமுருகன்:** ஏற்கெனவே, குப்பநத்தம் அணை இருக்கிறது. மிருகண்டா நதி இருக்கிறது. செண்பகத்தோப்பு அணை இருக்கிறது. இத்தனை அணைகளும் இருக்கும்போது, . . . .

சாத்தியக்கூறுகள் இருந்தால் அதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

**பெ.சு.தி. சரவணன்:** சாத்தியக் கூறுகள் இருப்பதாக அரசின் பரிசீலனையில் உள்ளது. கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதி, கலசப்பாக்கம் ஒன்றியம், மேல்சோழங்குப்பம், மிருகண்டா நதி அணை என்பது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 1996 - 2001 காலகட்டத்தில் என்னுடைய தகப்பனார் கலசப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் கோரிக்கை வைத்து, அமைச்சர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டு, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்டு, அன்றைய துணை முதல்வர் இன்றைய முதல்வர் தளபதி அவர்களால் திறக்கப்பட்டு மேல்சோழங்குப்பம், மிருகண்டா நதி அணை திறக்கப்பட்ட நாள் முதல் இன்று வரை எந்த மராமத்துப் பணியும் நடைபெறவில்லை. கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியின் இந்த முக்கியமான கோரிக்கை அமைச்சர் அவர்கள் சீர் செய்து கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் துரைமுருகன்:** உறுப்பினர் சொன்னதுபோல, அவருடைய அப்பா எம்.எல்.ஏ. என்னுடைய பக்கத்து சீட்டில் முதலில் இருந்தார். அதற்குப்பிறகு அமைச்சரான பிறகு எல்லா வேலையையும் வாங்கி விட்டார். அதுபோன்று இவரும் கேட்கிறார். இருந்தாலும் செய்யாற்றின் குறுக்கே எறையூர் கிராமம் அருகே தடுப்பணை ஒன்று கட்டுவதற்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. நெல்லிக்குப்பம் ஏரி, காரப்பட்டூர் ஏரிக்கு தண்ணீர் செல்வதற்கு கோரையாற்றின் குறுக்கே அணை கட்ட கள ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### சாத்தனூர் அணையின்

# இடப்புறக் கால்வாயை நீட்டித்து தர முடியுமா?

## பேரவையில் கு.பிச்சாண்டி கேள்வி!

சென்னை, ஏப். 25 -

சாத்தனூர் அணையின் இடப்புற கால்வாய் 50 ஆண்டுகளாக அப்படியே உள்ளது. அதை நீட்டித்து தர முடியுமா என்று பேரவையில் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி கேள்வி எழுப்பினார்.



அதன் விபரம் வருமாறு:-

**கு.பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்):** கரிகாலன் கல்லணையைக் கட்டினான்; காமராஜர் அவர்கள் பெரிய அணைகளைக் கட்டினார்கள்; தலைவர் கலைஞர் அவர்கள் 30க்கும் மேற்பட்ட அணைகளைக் கட்டியிருக்கிறார்கள். அவ்வாறு பல அணைகள் கட்டப்பட்டதால்தான் இன்றைக்கு விவசாயத்தில் நான் முதலிடத்தில் இருக்கிறோம்.

நம்முடைய மாநிலம். ஆகவே, நம்முடைய அமைச்சர் அவர்கள், இந்தப் பெரிய ஏரிகளை அப்படிப்பட்ட கல்லணையைப் போல அந்த ஏரிகளை அணைகளாகக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா சாத்தனூர் அணையிலே அந்த வெட்டப்பட்டக் கால்வாய் 30 ஆண்டுகாலமாக அதிலேயிருந்து நீட்டிப்பே தரப்படாமலிருக்கிறது. என்னுடைய தொகுதியான வெறையூர், கல்லேரி மற்றும் காடகம்மான் பொரிக்கல் போன்ற அந்த ஊர்களுக்கெல்லாம் பாசன வசதி செய்யக்கூடிய அளவிற்கு பெஞ்சல் புயலால் அதிக வெள்ளம் வரக்கூடிய சாத்தனூர் அணையை அந்தக் கால்வாய்கள் இடது புறக் கால்வாயை நீட்டித்துத் தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் துரைமுருகன்:** ஒரு நிலையிலிருந்து தண்ணீரை மாற்றுக்கு எடுக்கலாமென்றால், அதை உபயோகித்துக் கொண்டிருந்தவர்கள் கூடாது என்று எதிர்க்கிறார்கள். அந்த நிலையில்லாவிட்டால், பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் கோரிக்கை நிச்சயமாக நிறைவேற்றப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### உத்திரமேரூர் வட்டத்தில் – களியாம்பூண்டி குறுவட்டம் மற்றும்

# காஞ்சிபுரம் குறுவட்டத்தை இரண்டாகப் பிரித்திட வேண்டும்!

## சட்டப்பேரவையில் – க.சுந்தர் கோரிக்கை!

சென்னை, ஏப். 25 -

சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின்போது, உத்திரமேரூர் தொகுதி கழக உறுப்பினர் க.சுந்தர், “அளவில் மிகப் பெரியதாக உள்ள உத்திரமேரூர் வட்டம் - களியாம்பூண்டி குறுவட்டத்தையும், காஞ்சிபுரம் குறுவட்டத்தையும் இரண்டாகப் பிரித்திட வேண்டும்” என்று வேண்டுகோள் விடுத்தார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-



**உத்திரமேரூர் க.சுந்தர்:** வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய மானியக் கோரிக்கையின் போது பெரிய குறு வட்டங்களை எல்லாம் இரண்டாகப் பிரிப்பதாக அறிவித்திருக்கின்றார்கள். அதில் உத்திரமேரூர் வட்டத்திலே களியாம்பூண்டி குறுவட்டமும், அதுபோலவே காஞ்சிபுரம் வட்டத்திலே காஞ்சிபுரம் அந்த குறுவட்டமும் மிகப் பெரியதாக இருக்கின்றது. 20க்கும் மேற்பட்ட வருவாய் கிராமங்கள் அடங்கியதாக இருக்கின்றது.

எனவே அவற்றையெல்லாம் இந்த ஆண்டிலே இரண்டாகப் பிரிப்பதற்கு, இன்னும் சொல்ல வேண்டுமென்றால் காஞ்சிபுரம் வட்டத்தில் இருக்கின்ற குறு வட்டத்தினை மூன்றாகப் பிரிக்கப்படுவதற்குரிய அளவில் வாய்ப்புகள் இருக்கின்றன. அதையெல்லாம் அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா?

**அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர். இராமச்சந்திரன்:** பெரிய குறு வட்டங்களையெல்லாம் பிரிக்க வேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிற காரணத்தால்தான் இந்தத் தடவை சட்டமன்ற அறிவிப்பில் நாங்கள் அதைச் சொல்லியிருக்கிறோம். எந்தெந்த குறுவட்டங்களைப் பிரிக்க வேண்டுமென்பதை அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமும் கேட்டிருக்கிறோம். அதே போல சட்டமன்ற உறுப்பினர்களும் அவர்களுடைய கோரிக்கையாக அதைக் கொடுத்திருக்கிறார்கள். இரண்டையும் சரிசெய்து, விரைவில் இதற்குரிய ஆணைகளை அரசாங்கம் பிறப்பிக்கும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

# முட்டையிலிருந்து செய்யப்படும் மையோனைஸுக்கு ஓராண்டு தடை!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஏப். 25 –

முட்டையிலிருந்து செய்யப்படும் மையோனைஸுக்கு தமிழ்நாடு அரசு ஓராண்டு தடை விதித்தது. மையோனைஸ் செய்ய பயன்படுத்தப்படும் பச்சை முட்டையால் உணவினால் ஏற்படும் உடல்நல பாதிப்புகள் அதிகம் வர வாய்ப்பு உள்ளதாகவும், சால்மோனெல்லா பாக்டீரியா காரணமாக இந்த உணவு விஷமாக மாறலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறையற்ற வகையில் மையோனைஸ் தயார் செய்வது மற்றும் முறையாக சேமித்து வைக்கப்படாமல் இருப்பது உள்ளிட்ட காரணங்களால் மையோனைஸ் பொது சுகாதாரத்திற்கு அதிக பாதிப்பை விளைவிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம், 2006ன் பிரிவு 30 (2) (a)படி முட்டையிலிருந்து தயாரிக்கப்படும் மையோனைஸ் வகைகளுக்கு ஓராண்டு காலம் தடை விதிக்கப்படுவதாக தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவின்படி பொதுமக்கள் நலன் கருதி தமிழ்நாட்டில் எந்த பகுதியிலும், மையோனைஸ் உற்பத்தி செய்வது, சேமித்து வைப்பது, விநியோகம் செய்வது, விற்பனை செய்வது உள்ளிட்டவைகளுக்கு தடை விதிப்பதாகவும். தமிழ்நாடு உணவுப் பாதுகாப்புத் துறை சார்பில் வெளியிடப்பட்ட தமிழ்நாடு அரசிதழில், ஏப்ரல் 8ம் தேதியிலிருந்து ஓராண்டு காலத்திற்கு இந்த தடை உத்தரவு அமலில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சென்னை தலைமைச் செயலகத்தில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தியை Confedaration of Indian Industry (CII) பிரதிநிதிகள், சமீபத்தில் வியட்நாமில் தமிழ்நாடு அரசு சார்பில் CII மூலமாக Tamil Nadu Pavilion அமைத்தது தொடர்பாகவும் மற்றும் கம்போடியா, வியட்நாம் நாடுகளில் ஜவுளி வர்த்தகர்களுடன் சந்திப்பு நடைபெற்றதையும் குறித்து அமைச்சரிடம் நேரில் சந்தித்து விவரித்தனர். இக்கூட்டத்தில், கைத்தறி, கைத்திறன் துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு செயலாளர், திருமதி வே.அமுதவல்லி, துணிநூல் துறை இயக்குநர், திருமதி இரா.லலிதா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.